**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் அரசு பொறியியல் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து கடந்த 31.05.2023 ல் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். நான் பிறந்த வளர்ந்தது எந்த ஊர் என்றால் திருச்சி மாவட்டம், காட்டுபுதுார் ஆகும். நான் எவ்வளவு நாட்களாக ஈரோட்டில் வசித்து வருகிறேன் என்றால் 1986 லிருந்து ஈரோட்டில் வசித்து வருகிறேன். நான் ஈரோட்டில் செட்டில்டு ஆகிவிட்டேன் என்றால் ஈரோட்டில் வீடு கட்டி வசித்து வருகிறேன். எனக்கு காட்டுபுதுாரில் தோட்டம் உள்ளது. நான் வட்டிக்கு விடும் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை.

2. எதிரி கொடுத்த பதில் அறிவிப்பின் விபரம் தெரியுமா என்றால் தெரியும். திருச்சிஅண்ணா பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் மூத்த விரிவுரையாளராக பணிபுரியும் ஜோதி வெங்கடாசலம் எனக்கு என்ன உறவினர் என்றால் எனது மனைவிக்கு துாரத்து உறவினர். எதிரியை எப்படி தெரியும் என்றால் திருச்சியை சேர்ந்த பாஸ்கர் மூலமாக பழக்கம். அவர் தற்போது இறந்து விட்டார். எந்த வருடத்தில் இருந்து எதிரியை பழக்கம் என்றால் 2015ம் ஆண்டிலிருந்து பழக்கம். பாஸ்கர் என்ன காரணத்திற்காக எதிரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் திருச்சியில் உள்ள லாசன்ஸ் அபார்ட்மென்டில் பாஸ்கர் குடியிருந்தார். பாஸ்கர் வீட்டிற்கு எதிர்வீட்டில் எதிரி குடியிருந்தார் பாஸ்கர் வீட்டிற்கு போகும்போது எதிரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

3. பாஸ்கர் என்னை எதிரிக்கு அறிமுகப்படுத்திய விபரம் பாஸ்கர் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். பாஸ்கர் மனைவியை அழைத்து விசாரித்தால் பாஸ்கர் எனக்கு எதிரியை அறிமுகப்படுத்தி வைத்தாரா என்று தெரியுமா என்றால் சரிதான். தற்போதும் பாஸ்கர் குடும்பம் அதே முகவரியில் குடியிருக்கிறார்களா என்றால் கேலக்ஸி அபார்ட்மென்ட் கன்டோன்மென்ட் திருச்சி என்ற முகவரிக்கு மாறிவிட்டார்கள். எதிரியை திருச்சிவீட்டில் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் 2015,2016 ல் பார்த்திருப்பேன். தேதி ஞபாகம் இல்லை.

4. அதற்கு பின்னிட்டு நான் பாஸ்கர் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் போகவில்லை என்றால் பாஸ்கர் வீட்டிற்கு சென்றுள்ளேன். எதிரி எப்போது பணம் கேட்டார் என்றால் மே மாதம் 2022 ல் எதிரியின் கணவர் போன் மூலமாக என்னிடம் பணம் கேட்டார். என்னுடைய செல்போண் நெம்பர் 9443015990 ஆகும். எதிரியின் கணவர் எவ்வளவு பணம் கேட்டார் என்றால் ரூ.3 லட்சம் கேட்டார். எதற்காக பணம் கேட்டார் என்றால் குடும்ப அவசர தேவை என்று கேட்டார். என்ன அவசர தேவை என்று கேட்டேனா என்றால் இல்லை.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

5. போன் செய்து பணம் கேட்ட தேதியன்றே ரூ.3 லட்சம் கொடுக்காததற்கு காரணம் என்ன என்றால் அன்றைய தினம் கைவசம் பணம் இல்லாததால் கொடுக்கவில்லை. எனது வங்கிகணக்கிலும் பணம் இல்லையா என்றால் அன்றைய தினம் அவ்வளவு தொகை இல்லை. யாரிடம் பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் தென்னை மரங்கள், மாமரங்கள் குத்தகைக்கு விட்டு பணம் வந்தால் தருவதாக சொன்னேன், அந்தபணத்தை தான் கொடுத்தேன். யாருக்கு குத்தகைக்கு விட்டேன் என்றால் காட்டுபுதுாரை சேர்ந்த வெங்கடாசலம் என்பவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தேன். அந்த வகையில் ரூ.4 லட்சம் வருமானம் வந்தது.

6. குத்தகைக்கு விட்டது சம்பந்தமாக எனக்கும் வெங்கடாசலத்திற்கும் ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் எழுத்துமூலமாக ஒப்பந்தம் இல்லை, வாய்மொழி ஒப்பந்தம் தான். எந்த தேதியன்று குத்தகை பணம் கொடுத்தார் என்றால் 04.06.2022 ம் தேதி. பின்னிட்டு நான் தான் பணம் வந்துவிட்டது என்று எதிரியின் கணவரிடம் சொன்னேனா என்றால் 27.05.2022 ம் தேதியில் எதிரியின் கணவரிடம் போனில் பேசும்போது 4 ம் தேதி பணம் வந்துவிடும் என்று சொல்லி 7 ம் தேதி வந்து வாங்கி கொள்ளச் சொன்னேன். எதிரி மற்றும் அவரது கணவரை 2015 லிருந்து 2022 வரை எத்தனை முறை சந்தித்து இருப்பேன் என்றால் திருச்சி ஜாக்கி டென்டல் கேர் மருத்துவமனையில் எதிரி மற்றும் அவரது கணவரையும் 4,5 முறை நேரில் சந்தித்திருப்பேன். அங்கு எதிரி மற்றும் அவரது கணவரையும் தனித்தனியாக சந்தித்துள்ளேன்.

7. இருவரையும் தனித்தனியாக நோயாளிகளை பார்த்து கொண்டிருப்பார்கள் அதனால் சில சமயங்களில் எதிரியையும், சில சமயங்களில் எதிரியின் கணவரையும் பார்த்துவிட்டு வந்துள்ளேன். கிளினிக்-ல் சென்று சந்தித்ததற்கு என்ன காரணம் என்றால் 2021 ம் ஆண்டே ஏப்ரல் மாதம் ரூ.50,000 மும், அதே வருடம் ஜூன் மாதம் ரூ.1 லட்சமும், அதற்கு பின்னிட்டு ரூ.1 லட்சமும் என பணம் கொடுத்துள்ளேன். மேற்படி பணத்தை ஈரோடு வந்து வாங்கி செல்வார்களா என்றால் ஆமாம். மேற்படி பணத்திற்கு ஆதரவாக என்ன ஆவணம் வாங்கினேன் என்றால் ஒரு காசோலை வாங்கினேன். வட்டிக்கு கொடுத்தேனா என்றால் ரூ.50,000 பணம் கொடுக்கும்போது வட்டி வாங்கவில்லை, பின்னிட்டு தலா ரூ.1 லட்சம் தொகைக்கு வட்டி வாங்கினேன்.

8. 07.06.2022 அன்று ரூ.3 லட்சம் தொகை யார் வந்து வாங்கினார் என்றால் எதிரி ராதிகா மட்டும் எனது வீட்டிற்கு வந்து வாங்கினார். அவரிடம் என்ன ஆவணம் வாங்கினேன் என்றால் ஒரு காசோலை மட்டும் கொடுத்தார். எத்தனை மணிக்கு வந்தார் என்றால் மாலை 5.30 மணிக்கு வந்தார். அப்போது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். எனது மனைவி இல்லத்தரசியா என்றால் ஆசிரியராக பணிபுரிகிறார். அன்றைய தினம் கோவிலுக்கு

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சென்று விட்டார். மகள் கோக்சிங் கிளாஸ் சென்று விட்டார். நான் எதிரிக்கு பணம் கொடுத்த விபரம் என்னையும், எதிரியையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான்.

9. வழக்கு காசோலையில் உள்ள விபரங்கள் யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் எதிரி கொண்டுவரும்போதே பூர்த்தி செய்து கொண்டு என் முன்னிலையில் கையெழுத்து செய்து கொடுத்தார். எதிரியை தவிர வேறு யாருக்காவது பணம் கொடுத்து வாங்கியுள்ளேனா என்றால் 2 ஆசிரியர்களுக்கு கொடுத்துள்ளேன். 07.06.2022 ம் தேதி எதிரி மற்றும் என்னுடைய செல்போன் டவர் லொக்கேசன் பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது. இதற்கு முன் எதிரி எனது வீட்டிற்கு வந்துள்ளாரா என்றால் 2021 மே மாதம் எதிரியும், அவரது கணவரும் எனது வீட்டிற்கு வந்துள்ளார்கள். தேதி ஞாபகம் இல்லை. எனது வீட்டிற்கு வந்தபோது எதிரி கையில் செல்போண் வைத்துள்ளாரா என்று பார்த்தேனா என்றால் இல்லை.

10. எதிரி எனது வீட்டிற்கு வரும்பொழுது போன் செய்துவிட்டு வந்தாரா என்றால் இல்லை. எதிரி எனக்கு போன் செய்ததது கிடையாது, எதிரியின் கணவர் எனக்கு போனில் பேசுவார். 07.06.2022 ம் தேதியில் என்னிடம் யார் பேசினார்கள் என்றால் எதிரியும் அவரது கணவரும் பேசவில்லை. நான் 04.06.2022 ம் தேதி எதிரியின் கணவருக்கு பணம் வாங்கி கொள்ள நான் வரச்சொன்னதின் பேரில் எதிரி 07.06.2022 வந்தார். எதிரியின் கணவர் வராமல் ஏன் எதிரியை வந்தார் என்றால் எதிரியின் கணவருக்கு அவசர வேலை இருந்ததால் எதிரி மட்டும் வந்ததாக சொன்னார். என்னுடைய சட்ட அறிவிப்பில் எதிரியை எவ்வாறு தெரியும், எப்போது பணம் கேட்டார் என்றும், எங்குவைத்து பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. என்னுடைய சட்ட அறிவிப்பு, புகாரில் எனக்கு எதிரியை எவ்வாறு தெரியும் என சொல்லாமல் என்னுடைய சத்திய பிரமான வாக்குமூலத்தில் எதிரியை நன்கு தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு என்னை யாரென்று தெரியாது என்றும், எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், திருச்சியை ஜோதி வெங்கடாசலம் என்பவரிடம் பணம் வாங்கியிருந்தார் என்றும் அப்போது 6 வெற்று காசோலைகள், 2 வெற்று புரோநோட்கள் வாங்கிக்கொண்டார் என்றும், பணத்தை திருப்பி செலுத்திய பிறகும் ஆவணங்களை திருப்பி தராமல் அந்த காசோலைகளில் ஒரு காசோலையை என்னிடம் கொடுத்து ரூ.3 லட்சம் பணம் பெற்றதாக பொய்யாக அறிவிப்பு அனுப்பியுள்ளதாக அவருடைய பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அவருடைய கொடுக்கல் வாங்கலுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

12. எதிரி கொடுத்த பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரி குடியிருந்த அபார்ட்மென்ட் பெயர் என்ன என்றால் லாசன்ஸ் பார்க் அபார்ட்மென்ட் ஆகும். அதில் முதல்மாடியில் எதிரி குடியிருந்தார். ஜோதி வெங்கடாசலத்திடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தி பிறகும் ஆவணங்களை கொடுக்காமல் இருந்ததால் திருச்சி செசன்ஸ் காவல்நிலையத்தில் எதிரி என்மீதும், ஜோதி வெங்கடாசலம் மீதும் புகார் கொடுத்து குற்ற எண்.152/2023 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை தான் என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. எ.சா.ஆ.1 முதல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு எனது உறவினர் ஜோதி வெங்கடாசலம் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் Crl.O.P. 7753/2023 தாக்கல் செய்த மனுவில் அவரின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அவரிடம் உள்ள காசோலைகள் மற்றும் புரோநோட்களை இந்த எதிரியிடம் கொடுத்து விடுவதாக உறுதிமொழி அளித்ததின் பேரில் ஜோதி வெங்கடாசலத்திற்கு முன் ஜாமீன் வழங்கப்பட்டதா என்றால் அதுபற்றி தெரியாது. ஜோதி வெங்கடாசலம் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டபடி காசோலைகள் மற்றும் புரோநோட்களை எதிரிக்கு திருப்பி தரவில்லை என்றால் அவருடைய வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தமும் இல்லை. எதிரியும், அவரது கணவரும் ஜோதி வெங்கடாசலத்திடம் பணம் வாங்கியுள்ளார்களா என்றால் வாங்கினார்களா என்று எனக்கு உறுதியாக தெரியாது.

14. எ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் வழக்கு காசோலை எண்.005703 காசோலை பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மனைவியின் உறவினர் ஜோதி வெங்கடாசலத்திற்கும் எனக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றும், சுமுகமான உறவு தான் இன்று வரை உள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கைக்கு பிறகு நான் எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுததுள்ளேன். 07.07.2023ம் தேதி எதிரிக்கும், அவரது கணவருக்கும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பினை நானும், ஜோதி வெங்கடாசலமும் சேர்ந்து தான் கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது நாங்கள் அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரிதான் அந்த அறிவிப்பு கவருடன் **எ.சா.ஆ.2 வரிசை** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பில் 5 காசோலைகள் மற்றும் புரோநோட்கள் என்னிடம் இருப்பதாகவும் வந்து பெற்றுக் கொள்ளுமாறு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியுள்ளேன்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

15. மாண்புமிகு மதுரைஉயர்நீதிமன்றத்தில் ஜோதி வெங்கடாசலம் தன் வசம் காசோலைகள் மற்றும் புரோநோட்கள் இருப்பதாகவும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக என்னிடம் காசோலைகள் மற்றும் புரோநோட்கள் இருப்பதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு மதுரைஉயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவானது ஜோதி வெங்கடாசலம் அவர் ஒப்புக்கொண்டவாறு ஆவணங்களை எதிரியிடம் ஒப்படைக்காததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது அதற்கான உத்தரவு என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16. 5 காசோலைகள் மற்றும் புரோநோட்கள் எப்போது என் கைவசம் வந்தது என்றால் மே மாதம் 2021 ல் எதிரியின் கணவர் ஈரோட்டில் யாரிடமோ பெற்ற கடனை அடைத்துவிட்டு அவரிடம் கொடுத்திருந்த ஆவணங்களை என் வீட்டிற்கு வந்த போது தவறுதலாக கவரில் வைத்திருந்ததை வைத்துவிட்டு சென்றுவிட்டார். அப்போது என் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். மாலை 5.30 மணிக்கு மேல் தான் எதிரியின் கணவர் எனது வீட்டிற்கு வந்தார். அன்றைய தினம் விடுமுறை நாளா, பணி நாளா என்றால் பணி நாள். எவ்வளவு நேரம் என் வீட்டில் இருந்திருப்பார் என்றால் 20 நிமிடம் இருந்திருப்பார். எதிரியின் கணவர் என் வீட்டில் தவறுதாக விட்டு சென்ற கவரை எப்போது பார்த்தேன் என்றால் கவரை அப்போதே பார்த்துவிட்டேன், அதில் என்ன உள்ளது என திறந்து பார்க்கவில்லை. அந்த கவர் எதிரியின் கணவருடையது என தெரிந்து கொண்டேன்.

17. கவரை விட்டு சென்றுவிட்டதாக எதிரியின் கணவரை அழைத்து விபரத்தை சொன்னேனாஎன்றால் சொல்லவில்லை. எதிரியின் கணவர் விட்டு சென்ற கவரை பிரித்து பார்க்காமல் நான் பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்டேனா என்றால் ஆமாம். எதிரியின் கணவர் என் வீட்டிற்கு வந்து கவரை விட்டு சென்றதது எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்னர் நடந்ததா என்றால் ஆமாம். எதிரியின் கணவர் விட்டு சென்ற கவரை பிரித்து கூட பார்க்காமல் அவருக்கு தகவல் கூட சொல்லாமல் பிரோவில் வைத்துக்கொண்டதற்கான காரணம் என்ன என்றால் தவறுதலாக பிரோவில் வைத்து விட்டேன். அதற்கு காரணம் எதுவும் இல்லை.

18. அதற்கு பின்னிட்டு எதிரியின் கணவர் எனது வீட்டில் ஒரு கவரை தவறுதலாக வைத்துவிட்டேன் என என்னிடம் போன் செய்து கேட்டாரா என்றால் இல்லை. உண்மையில் எதிரியின் கணவர் நான் சொல்வது போல் ஈரோட்டில் உள்ள நபரிடம் கடனை அடைத்து விட்டு அந்த கடன் ஆவணங்களை வாங்கி வந்திருந்து

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு வரும்பொழுது தவறுதலாக வைத்துவிட்டு சென்றிருந்தால் பின்னிட்டு என்னிடம் போன் செய்து கேட்டிருப்பார் என்றால் எதிரியின் கணவர் கேட்கவில்லை. 5 காசோலைகளையும், 2 புரோநோட்களும் என்னிடம் உள்ளது என்பதை எப்போது அந்த கவரை பிரித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி எனக்கு பதில் அறிவிப்பு 16.08.2022ம் தேதி கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பினை படித்த பிறகு பின்னிட்டு கவரை பிரித்து பார்த்தேன்.

19. கவரை பிரித்து பார்த்த பிறகு 5 காசோலைகள், 2 புரோநோட்கள் எனது வீட்டில் தவறுதலாக வைத்துவிட்டு சென்றததை குறித்து எதிரியின் கணவருக்கு போன் செய்து வந்து வாங்கிக்கொள்ளச் சொல்லி சொன்னேனா என்றால் எதிரியின் கணவருக்கு போன் செய்தேன், அவர் எடுக்கவில்லை. எதிரியின் கணவர் செல்போன் நெம்பர் 9080962297 ஆகும். மற்றொரு எண் வைத்துள்ளார் அவருடைய விசிடிங் கார்டை பார்த்து சொல்லவேண்டும்என கோரியதால் அனுமதிக்கப்பட்டு அனுமதியின் பேரில் மொபைல் எண்ணை விசிட்டிங் கார்டை பார்த்து சொல்லுகிறார். மற்றொரு எண்.9894603601 ஆகும். நானும், ஜோதி வெங்கடாசலமும் சேர்ந்த கொடுத்த அறிவிப்பில் காசோலைகள் மற்றும் புரோநோட்கள் 2 பேரிடமும் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20. திருச்சி நீதிமன்ற வளாகத்தில் நானும், ஜோதி வெங்கடாசலமும் சட்ட உதவி மையத்தின் அருகில் வந்தபோது எதிரியும் அவரது கணவரும் மதிய வேலை வந்திருந்தாகவும் அப்போது இருதரப்பு வழக்கறிஞர்களும் இருந்தார்கள் என்றும், எதிரியின் கணவர் 6 காசோலைகள் மற்றும் 2 புரோநோட்களை கொடுத்தால் தான் அசல் ஆவணங்களை வாங்கிக்கொள்வோம் என்றும், இல்லை என்றால் வாங்க மாட்டோம் என்று சொன்னார் என்றால் சரிதான். ரூ.3லட்சம் பணம் கொடுத்தால் மற்றொரு காசோலை கொடுப்பதாக நான் சொன்னேன். அந்த சமயம் எதிரியும், அவரது கணவரும் என்னை யாரென்று தெரியாது என்றும், முதன்முதலில் தற்போது பார்க்கிறேன் என்றும், சுப்பிரமணியம் தாங்கள் என்பது தற்போது தெரியும் என்று சொன்னார்கள் என்றால் இல்லை.

21. எதிரியின் கணவரிடம் எந்த வருடத்தில் இருந்து போனில் பேசி வருகிறேன் என்றால் 2021ம் ஆண்டு முதல் வழக்கு காசோலை கொடுத்ததாக சொல்லும் தேதி வரை பேசினேன். அதற்கு முன்பு நேரில் சந்தித்து பேசியதாக நான் சொன்னதை தவிர போனில் பேசியுள்ளேனா என்றால் இல்லை. நானும், ஜோதி வெங்கடாசலமும் அனுப்பிய அறிவிப்பில் ரூ.3லட்சத்தை நான் கேட்டதாகவும், எதிரி தர மறுத்தாகவும் நீதிமன்ற வளாகத்தில் சமரசம் பேசிய விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2021 முதல் காசோலை கொடுத்ததாக சொல்லும் தேதி வரை என்னுடைய செல்போன் அழைப்புகளை பார்த்தால்

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : சுப்பிரமணியன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியின் கணவரிடம் பேசி விபரம் தெரியும் என்றும், செல்போன் அழைப்புகளை அழைத்து பார்க்க ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை.

22. இந்த வழக்கின் எதிரி 6 காசோலைகள் மற்றும் 2 புரோநோட்களை தரேண்டும் என்றும், இல்லை என்றால் புலன்விசாரணை அதிகாரி மூலம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் ஜோதி வெங்கடாசலத்திற்கு கடிதம் அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் ஒரு நகலை ஜோதி வெங்கடாசலத்திற்கும் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பிற்கு காசோலைகள் மற்றும் புரோநோட்கள் குறித்து ஜோதி வெங்கடாசலத்திடம் பேசினேனா என்றால் இல்லை.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- சாட்சி : **சுப்பிரமணியன்**

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1
ஈரோடு.